**தலைப்பு 149 – கைத்தொழில் அமைச்சு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கைத்தொழில் அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜுன் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின்/ திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அலுவலக உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்களின் பெறுமதிகள் முறையே ரூபா 65,612,794 தொகை மற்றும் ரூபா 480,098,759 தொகை காணப்பட்டது. 2021 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அவற்றின் ஆரம்ப மீதிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 81,862,905 தொகை மற்றும் ரூபா 483,123,759 தொகையாக காணப்பட்டமையால், ரூபா 19,275,111 | ஆரம்ப மீதிகளின் வித்தயாசத்திற்கான காரணங்களை விஷேடமாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என ஏற்றுக் கொள்கின்றேன். கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அப் பெறுமதிக்குரிய காரணங்கள் மற்றும் அந்த மீதிகள் சீராக்கல்களுக்கு உரிய நாட்குறிப்பின் பிரதிகள் குறிப்பிட்ட கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வித்தியசத்தை இனங் கண்ட பின்னர் தேவையான சரி | வெளித் தரப்பினர் அறிந்துகொள்வதற்காக வித்தியாசத்திற்கான காரணம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், அவ் வித்தியாசத்திற்கான காரணங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செய்தலுக்காக நாட்குறிப்பொன்று திறைசேரியின் அரச கணக்குத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (ஆ) | அமைச்சின் பெயரில் பதிவு செய்திருந்த ரூபா 52,290,000 தொகை பெறுமதியுடைய 04 வாகனங்கள் சொத்துக்கள் என இனங் கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த 04 வாகனங்களின் உரிமையை அமைச்சின் பெயரிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளமையால் அவற்றின் பெறுமதியை அமைச்சின் சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அமைச்சுக்கு சொந்தமான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |
| (இ) | வேறொரு அமைச்சுக்கு உரித்தாக்கப்பட்டிருந்த ரூபா 12,000,000 தொகை பெறுமதியான வாகனம் ஒன்று கைத்தொழில் அமைச்சின் சொத்துக்கள் கணக்கில் இருந்து அகற்றியிருக்கவில்லை. | இந்த வாகனம் நிதி அமைச்சுக்கு உரித்தாக்குவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், உரிமையை உரித்தாக்கல் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கைத்தொழில் அமைச்சின் சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | அமைச்சுக்கு சொந்தமில்லாத சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்ற வேண்டும். |
| (ஈ) | கைத்தொழில் அமைச்சின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ள தற்காலிக மட்டத்தில் ஏனைய அமைச்சுக்களுக்கு வழங்கியிருந்த 03 வாகனங்களின் பெறுமதியாகிய ரூபா 15,550,000 இற்கான தொகை கைத்தொழில் அமைச்சின் சொத்து ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 03 வாகனங்கள் இந்த அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனம் ஒன்றிற்கு பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்ததென அறிவிக்க விரும்புகின்றேன். குறிப்பிட்ட வாகனங்களை அமைச்சின் சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சுக்கு சொந்தமான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |
| (உ) | பல்வேறு அமைச்சுக்களில் இருந்து ரூபா 20,100,000 தொகை பெறுமதியான 09 வாகனங்கள் கைத்தொழில் அமைச்சுக்கு கிடைத்திருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த அமைச்சு முடிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி எந்த இடத்திலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட விடயம் உரித்தாக்கப்பட்ட பின்னர் இந்த 09 வாகனங்களும் அமைச்சின் சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | அமைச்சு நூலகத்தில் காணப்படும் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து சொத்துக்கள் என இனங் கண்டு நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அமைச்சு நூலகத்தில் காணப்படும் அனைத்து புத்தகங்களும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டு, புத்தகங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சுக்கு சொந்தமான சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |
| (எ) | அமைச்சினால் செலவுகள் மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதி அதன் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 1997 ஆண்டு முதல் 30 கைத்தொழில் பேட்டைகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 14 நிருவாக கட்டிடங்களின் பெறுமதியாகிய ரூபா 105.878 மில்லியன் தொகை எந்த அலுவலகத்திலும் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | இந்த சொத்துக்கள் கணக்கீடு செய்வது தொடர்பாக திறைசேரியின் அரச கணக்குத் திணைக்களத்துடனும் கலந்துரையாடியதுடன், அதன் கிடைத்த அறிவுரையின் படி குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் ஒவ்வொரு சொத்துத் தொகுதியின் கீழ் வேறாக இனங் கண்ட பின்னர் அமைச்சின் நிதி அல்லாத சொத்துக்கள் என கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | மூலதனச் செலவுகள் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும் |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 110 இற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை/ நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு இனிமேல் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணம் 110 ஏற்பாடுகளுக்கு இணங்க அதன் கீழ் காணப்படும் படிவத்தின் படி சேதங்கள் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய 25 செலவு தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாடுகளில் 53 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான | பொதுவாக கணித்த போது இந்த ஆண்டில் திட்டமிடப்பட்டவாறு அலுவலக அலுவல்கள் குறைந்த மட்டத்தில் நடாத்தப்பட்டமை, புதிய | நி.பி. 50 இற்கு இணங்க சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| | வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | செயற்திட்டங்கள் ஆரம்பித்தல் மற்றும் காணப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்ச்சியாக செயற்படுத்துதல் எதிர்பார்த்தவாறு நடைபெறாமை அனேகமான சேமிப்புக்களுக்கு காரணமாக இருந்தது. | |
| (ஆ) | செலவுத் தலைப்பு 149-1-1-0-2003 இற்காக ரூபா 1,200,000 தொகை ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மேலும், ரூபா 10,500,000 தொகை குறை நிரப்பு என பெற்றிருந்ததுடன், அதன்படி, அதன் மொத்த தேறிய ஏற்பாடுகள் ரூபா 11,700,000 தொகையாக காணப்பட்டது. அவ்வாறாயினும், வருட இறுதியளவில் அவற்றில் ரூபா 10,581,045 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன், அது 90 சதவீதத்தை கொண்டிருந்தது. உரிய முறையில் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையினால், மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த தொகையையேனும் செலவிட்டிருக்காமல் இருக்கும் போது அமைச்சு பதவியணியின் வாகனங்களுக்காக மேலும் ரூபா 10,500,000 தொகை குறைநிரப்பு மதிப்பீடொன்று பெறப்பட்டிருந்தது. | கௌரவ அமைச்சரினால் கிடைக்கப்பெற்ற அறிவுரையின் படி அமைச்சுச் செயலாளரின் MIC/FIN/12/12/2021 இலக்க மற்றும் 2021.04.07 திகதிய கடிதத்தின் மூலம் திருத்த வேலைகளுக்காக அப்போது ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் ரூபா 10.5 மில்லியன் மேலதிக ஏற்பாடொன்று விண்ணப்பிக்கப்பட்டது. கூறுவிலை அழைத்த போது 02 வாகனங்களுக்காக மாத்திரம் கூறுவிலைகள் கிடைக்கப்பெற்றிருந்தது. அந்த கூறுவிலைகள் எமது மொத்த மதிப்பீட்டை விட கூடிய பெறுமதியை கொண்டிருந்தது. அதன்படி, ஒரு வாகனத்தை ஏனும் திருத்த வேலை மேற்கொள்வதற்காக அந்தத் தொகை போதியளவாக காணப்படாமையால் அவ்வாறான மிகைக் கிரயம் ஒன்று மேற்கொண்டு திருத்த வேலை மேற்கொள்ளல் ஆக்கபூர்வமற்றதனால், அந்த ரூபா 10.5 மில்லியனிற்கான மேலதிக ஏற்பாடுகளையும், திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | திட்டமொன்றின்றி குறைநிரப்பு ஒதுக்கிக் கொள்ளக் கூடாது என. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி பண உறுதிப் பத்திரங்களை பரிசோதிக்கும் போது 2021 ஆண்டிற்கான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் ரூபா 1,932,762 தொகை மற்றும் SA – 92 திறைசேரி அச்சுப் பிரதியின் படி பொறுப்புகள் ரூபா 9,981,985 தொகையாக காணப்பட்டது. அவ்வாறாயினும், அமைச்சினால் 2021 ஆண்டிற்காக 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மேற்கூறிய ஈடுபாட்டுப் பொறுப்புக்களை உட்படுத்தி பொறுப்புக்கள் தொடர்பான கூற்று ஒன்று 2021 நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021.12.31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏதும் காணப்படவில்லை. அத் திகதி வரை எம்மிடம் காணப்பட்ட அனைத்து பில் பத்திரங்கள் மற்றும் பண உறுதிப் பத்திரங்களுக்காக 2021.12.31 திகதி வரை கொடுப்பனவு மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டது.<br>எனினும், 2021 ஆண்டிற்கான சில பண உறுதிப் பத்திரங்கள் மற்றும் பில் பத்திரங்கள் 2022 ஜனவரி 01 திகதிக்கு பின்னர் கிடைத்திருந்தமையால் அந்த பில் பத்திரங்கள் 2022 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் உட்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றொன்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நி.பி. 396 | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 617,007 தொகை பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி | 2022.01.20 திகதி இந்த அனைத்து காசோலைகளும் தற்காலிகமாக அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதுடன், தற்போது குறிப்பிட்ட தகவல்கள் முறைமை | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊடாக நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பின்னர் அந்தப் பணத்தை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு தேவையான விரைவான நடவடிக்கை எடுப்பேன். | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை | அனைத்து எரிபொருள் பரிசோதனைக்குப் பின்னர் ஒவ்வொரு 12 மாத கால வரையறைக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூர ஓட்டத்தின் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான திருத்த வேலையின் பின்னர் ஆகிய விடயங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறாயினும், அமைச்சுக்கு சொந்தமான 71 வாகனங்களில் 11 வாகனங்களில் மாத்திரம் 2021 ஆண்டிற்காக எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 60 வாகனங்களுக்குரிய எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வழமையான போக்குவரத்து காணப்படும் சந்தர்ப்பங்களில் முடியுமான அளவு இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என கருணையுடன் அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கை விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலக்கம் சீ ஏ/1/17/1 மற்றும் 2010 மே 14 திகதிய ஜனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் பிரிவு 3.1 | கௌரவ அமைச்சர்களின் பயன்பாட்டுக்காக மற்றும் பாதுகாப்பு அலுவல்களுக்காக ஒதுக்கப்படும் உச்சமட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கைத்தொழில் அமைச்சின் அமைச்சருக்கு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களுக்கு மேலதிகமாக லங்கா மினரல் சேண்ட் கம்பனியின் டபல் கப் வாகனம் ஒன்று 2021 மார்ச் | அமைச்சர்களின் பயன்பாட்டுக்காக லங்கா மினரல் சேண்ட் கம்பனியின் வாகனம் ஒன்று வழங்கப்படல் தொடர்பாக அமைச்சுக்கு தொடர்பு ஏதும் இல்லை. | சுற்றறிக்கை விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மாதம் முதல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அந்த கப் வண்டிக்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்காக வருமான அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 18,000 தொகையும், புகை பரிசோதனை சான்றுதழிற்காக ரூபா 2,260 தொகையும் 2021 மார்ச் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை சாரதிக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 1,138,140 தொகையும் லங்கா மினரல் சேன்ட் கம்பனியில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச சந்தையில் போட்டித் தன்மைக்கு முகங்கொடுக்கக் கூடிய பண்புசார் தரத்திலான பண்டங்கள் உற்பத்தி செய்வதற்காக உள்நாட்டு கைத்தொழிலை மேம்படுத்துதல் மற்றும் உள்நாட்டு சந்தையின் தேவையினை இனங் கண்டு அந்த தேவையினை நிறைவேற்றுவதற்காக தேவையான கைத்தொழில் துறைகளை அபிவிருத்தி செய்தல் எனும் குறிக்கோளுடன் அபிவிருத்தி பிரிவு I நிறுவப்பட்டது. அதன் செயலாற்றுகையை பரிசோதனையின் போது திட்டத்தில் அடங்கியிருந்த 06 நிகழ்ச்சித் திட்டங்களில் 03 இன் முன்னேற்றம் 0 தொகையாக காணப்பட்டது. | நிலவிய கொவிட் நிலைமையின் காரணமாக செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது. | பூர்த்தி செய்யக்கூடிய கருமங்கள் மாத்திரம் திட்டத்தில் உட்படுத்த வேண்டும். |
| (ஆ) | உள்நாட்டு கைத்தொழில் துறையினை வழுப்படுத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்குவதும், அதன் மூலம் உயர்ந்த வேலைப்பாட்டுடனான | நிலவிய கொவிட் நிலைமையின் காரணமாக செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது. | - மேற்படி - |

மற்றும் தரமான பண்டங்களை உற்பத்தி செய்து சர்வதேச சந்தையை வெற்றிகொள்வதற்கு இயலுமான நிலைமை ஒன்றினை உருவாக்கும் குறிக்கோளுடன் அபிவிருத்திப் பிரிவு II நிறுவப்பட்டதுடன், அதன் செயலாற்றுகையை பரிசோதனை செய்த போது திட்டத்தில் அடங்கியிருந்த 03 நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் 0 தொகையாக இருந்தது.

(இ) சிறு மற்றும் சிறிய அளவிலான கைத்தொழில்களின் தலைமைத்துவம் மற்றும் தொழில் முயற்சியாளர்களை முன்னேற்றும் செயற்திட்டம் III வாணிப வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக கைத்தொழிலாளர்களுக்கு கடன் வழங்கப்பட்ட போதிலும், கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை, கடன் தவணைகள், வட்டி, பெற வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி மீதி ஆகியவற்றை கணக்கிடக் கூடிய முறைமை ஒன்று நிதியத்தின் மூலம் பேணிச் சென்றிருக்கவில்லை. அதற்காக 2016 ஆண்டின் போது சுயமாக இயங்கும் கடன் முறைமை ஒன்று நிறுவுவதற்காக ரூபா 757,025 தொகை மற்றும் 2017 ஆண்டின் போது தரவுகளை உட்படுத்துவதற்கு பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் இருவர் சேர்க்கப்பட்டு ரூபா 174,200 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக குறிப்பிட்ட திகதி ஒன்றில் ஒவ்வொரு கடன்காரரிடமும் கிடைக்க வேண்டிய தொகையை சரியாக இனங்காண்பதற்காக நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. அரையாண்டு அடிப்படையில் வங்கிகளில் இருந்து கிடைக்கும் கடன் தவணை மற்றும் வட்டி சரியானவை என கணித்து

இந்தக் கடன் திட்டத்திற்காக முக்கியமான வங்கி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந் நிறுவனங்கள் மத்திய வங்கியின் ஆலோசனையின் படி மிகவும் நம்பிக்கையுடன் Loan Automation System நிறுவப்பட்டு இருந்ததுடன், வங்கியுடன் கையொப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கைக்கு இணங்க மற்றும் நம்பிக்கையின் மீது இந்தக் கடன் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. அமைச்சினால் வழங்கப்பட்ட கடன் தொடர்பாக சரியான தகவல்கள் செயற்திட்ட முகாமைத்துவ அலகில் காணப்படுவதுடன், வங்கியினால் செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்கு அனுப்பப்படும் கடன் தவணைகள் மற்றும் வட்டி வங்கியின் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பரிசோதனை செய்த பின்னர் எங்களுக்கு அனுப்பப்படுகின்றது.
எவ்வாறாயினும், கடன் திட்டம் தொடர்பாக உடனடியாக தகவல்களை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் சுயமாக இயங்கும் கடன் முறைமை ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல் அந்த முறைமைக்கு தகவல்கள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தத் தரவுகள் அமைச்சின் பிரதான சர்வரில் (Main server) களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தமையால் பிரதான சர்வரில் ஏற்பட்டிருந்த வழு ஒன்றின் காரணமாக அந்த சர்வர்

சுயமாக இயங்கும் கடன் முறைமை ஒன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்தல் தவிர உண்மையாக கடன்காரரிடம் கிடைக்க வேண்டிய தொகையின் சரியான தன்மையை கணக்கிடுவதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது. | செயற்படாது இருந்தமையால் அதற்கு உட்படுத்தப்பட்டிருந்த தரவுகளையும் மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும், மீண்டும் நிறுவுவதற்கான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு அந் நிறுவனத்தின் அலுவல்கள் செயற்படாத நிலைமையில் காணப்பட்டமையால் இதுவரை முறைமையை உண்மை நிலைமைக்கு மாற்றுவதற்கு முடியாமல் இருந்தது. | |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் காணப்படும் 33 கைத்தொழில் பேட்டைகளில் உள்ள 1001 காணித் துண்டுகளில் இருந்து 791 காணித் துண்டுகள் பல்வேறு முதலீட்டு அலுவல்களுக்காக கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 78 காணித் துண்டுகள் அதாவது 4968.2 பர்சஸ் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. மத்திய மாகாண நாலந்தா கைத்தொழில் பேட்டையில் 38 மொத்த காணித் துண்டுகளில் 08 அமைச்சின் அங்கீகாரம் இன்றி 2018 ஆண்டு முதல் கைத்தொழில் நடாத்தப்பட்டு வருவதுடன், வட மாகாணத்தில் 31 காணித் துண்டுகளில் 08 மாத்திரம் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | காணப்படும் 31 வெற்று காணித் துண்டுகளுக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற பின்னர் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாலந்தா கைத்தொழில் பேட்டையில் காணித் துண்டுகளுக்காக தற்போது காணப்படும் வழக்கு தீர்க்கப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலீடு செய்வதற்காக கைத்தொழிலாளர்கள் இணைவது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | தகைமையுடைய முதலீட்டாளர்களை தெரிவு செய்து காணிகளை வழங்கி கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிறு மற்றும் சிறு அளவிலான கைத்தொழில்களின் தலைமைத்துவம் மற்றும் தொழில் முயற்சியாளர்களை முன்னேற்றும் செயற்திட்டம் III கீழ் பொதுவான கடன் திட்டம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் கூட்டுக் கடன் திட்டம் ஆக 02 துணைச் செயற்திட்டங்களுக்காக கடன் வசதிகள் வழங்க வேண்டியிருந்த | இந்த கடன் திட்டத்தின் மூலம் கடன் பெறுவதற்காக விண்ணப்பித்த வியாபாரிகளுக்கு இந்த தொழில்நுட்ப பரிமாற்றக் கடன் திட்டம் தொடர்பாக அறிவூட்டல் வழங்கப்பட்ட போதிலும் அதற்காக கிடைக்கக் கூடிய கோரிக்கைகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.<br>எவ்வாறாயினும் கடந்த | தொழில்நுட்ப பரிமாற்ற கடன் மற்றும் கூட்டுக் கடன் திட்டத்தையும் விரிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும், பொதுவான கடன் திட்டத்தின் கீழ் மாத்திரம் கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. | ஆண்டுகளின் போது வர்த்தக தேவையின் மீது தொழில்நுட்ப பரிமாற்றக் கடன் திட்டத்தின் கீழ் வர்த்தகர்கள் சிலருக்கு கடன் வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் எதிர் காலத்திலும் இது தொடர்பாக அறிவூட்டும் அலுவல்கள் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சுக்கு சொந்தமான 05 வாகனங்கள் 1 – 4 வருட கால வீச்சில் முதல் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் அமைச்சின் வளவில் வைக்கப்பட்டிருந்தது. இந்த 05 வாகனங்களில் 2013, 2014 ஆண்டுகளில் கொள்வனவு செய்திருந்த மோட்டார் வாகனங்கள் 02 அடங்கியிருந்தன. அதேபோல் அப்புறப்படுத்த வேண்டிய மட்டத்தில் காணப்பட்ட வாகனம் ஒன்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய மற்றும் 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் I பகுதியில் பிரிவு 13.2 இன் படி மற்றும் நி.பி. 770(4) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் திருத்த வேலைகளுக்காக ஒரு வருடத்திற்கு சுமார் ரூபா 8 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்படுவதுடன், இந்த வாகனங்களின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக இந்த ஏற்பாடுகளை ஒதுக்கினால் நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபடும் வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்ள முடியாமல் போகும். அதன் காரணமாக போதியளவு ஏற்பாடுகள் காணப்படாமையால் வாகனங்களுக்கான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது அமைச்சினால் அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்களை இனங் கண்டு அப்புறப்படுத்துவதற்காக 2022.03.25 திகதி குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விரைவாக திருத்த வேலைகளுக்காக அனுப்ப வேண்டியிருந்ததுடன் அப்புறப்படுத்த வேண்டி மட்டத்தில் காணப்படும் வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் திருத்த வேலைகளுக்காக தனியார் கராஜ்களுக்கு அனுப்பப்பட்டிருந்த 03 வாகனங்கள் 2022 மார்ச் 15 திகதி அளவில் திருத்த வேலை மேற்கொண்டு ஓட்டத்திற்கு சேர்த்திருக்கவில்லை. | <u>இலக்கம் KG – 8980 கொண்ட வாகனம்</u><br>2019 மார்ச் 18 திகதி வழக்கொன்றின் கீழ் பிணைமுறி ஒன்றின் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்போது வழக்கு முடிவடைந்திருப்பதனால் வழக்கறிக்கை கிடைத்த பின்னர் சட்ட ஆலோசனை மீது வாகனத்தை திருத்துவதற்கு அனுப்ப வேண்டியிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | <u>இலக்கம் PD – 6293 கொண்ட வாகனம்</u><br>கூட்டுறவு காப்புறுதிக் கம்பனியினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த தொகை போதியளவாக காணப்படவில்லை என கராஜினால் அறிவிக்கப்பட்டிருந்தமையால் அதனை திருத்தும்படி 2021.10.25 திகதி கூட்டுறவு காப்புறுதிக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டது.<br><u>இலக்கம் PE – 1898 கொண்ட வாகனம்</u><br>விபத்தொன்றின் போது இடது பக்கம் சேதமடைந்திருந்ததென காப்புறுதி நிறுவனத்திற்கு அல்லது குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்திருக்கவில்லை. அவ்வாறு அறிவித்திருக்காமையால் காப்புறுதி நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் போனது. கடந்த காலப் பகுதியில் கொவிட் தொற்றுநோய் காரணமாக நாட்டில் காணப்பட்ட பயண வரையறை மற்றும் ஊரடங்குச் சட்டம் நிலைமையின் காரணமாக தேவையான உதிரிப் பாகங்கள் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் திருத்த வேலைகள் தாமதம் அடைந்தன. | |
| (இ) | தென் மாகாண படஅத கைத்தொழில் பேட்டையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிருவாகக் கட்டிடம் பாவிக்க முடியாத அளவு சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. | அம்பலந்தோட்டை பிரதேச செயலாளரினால் வழங்கியிருந்த அறிக்கையின் படி இந்தக் கட்டிடம் பயன்படுத்துவதில் ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்டது. | விரைவாக திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அகற்றுவதற்கு நடடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் அமைச்சினால் 2021 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி சட்ட பிரிவின் சில விடயங்கள் உள்ளவாறான மீதி மற்றும் பேரேட்டின் படியான மீதிகள் | பேரேட்டில் பதிவு செய்யும் போது ஏற்பட்டிருந்த தவறொன்றின் காரணமாக சட்ட பகுதியில் சில விடயங்களில் உள்ளவாறான மீதி பேரேட்டின் படி மீதிகளிடையே முரண்பட்டிருந்த. அந்த பிழைகளை சரி செய்த பின்னர் பேரேட்டின் படி | பயன்படுத்த முடியாத பண்டங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இடையே வித்தியாசங்கள் காணப்பட்டன. 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகளின் படி தெற்கு, ஊவா – பதுள்ள மற்றும் சபரகமுவ பிராந்திய கைத்தொழில் சேவை நிலையங்களில் 2020 ஆண்டு முதல் காணப்படும் பயன்படுத்த முடியாத பண்டங்கள் 2021 ஆண்டிலும் அவ்வாறே காணப்பட்டதெனவும், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி மற்றும் உள்ளவாறான மீதி சமப்பட்டது.<br><br>கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பிராந்திய கைத்தொழில் சேவை நிலையங்களில் பண்டங்களை அப்புறப்படுத்தும் அலுவல்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் போனது எனவும், இவ்வாண்டில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபடும் என அறிவிக்கின்றேன். | |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வாகனப் பகுதிகளை இணைக்கும் அலுவல்களுக்காக மினுவாங்கொட கைத்தொழில் பேட்டையில் 02 ஏக்கர் காணி 2002 ஜூன் 11 திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயற்படாத மற்றும் குறை பயன்பாடுகளை உடைய செயற்திட்ட அறிக்கைகளின் படி அங்கு ரூபா 500 மில்லியனிற்கான முதலீடு ஒன்று மற்றும் 100 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்குவதற்கு இணங்கியிருந்தது. அவ்வாறாயினும், சுமார் 09 வருட காலமாக இதன் வியாபார அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்துடன், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் இந்த நிறுவனத்திற்கு குத்தகை காணி உறுதி ஒன்று வழங்கியிருக்காமையால் பாரிய குத்தகை தொகை ஒன்று செலுத்த இருந்ததென கண்டிறியப்பட்டது. வெளிக்கள பரிசோதனையின் போது இந்த இடத்தில் வாகனங்களை இணைக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், 3000 சதுர அடிகளைக் கொண்ட இரண்டு கட்டிடங்கள் | வாகனங்களை பதிவு செய்தல் மற்றும் ஏனைய சட்டரீதியான விடயங்கள் மீது உயர் நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்கு அலுவல்கள் காரணமாக இந்த தொழில் முயற்சியை மீண்டும் ஆரம்பிக்க முடியாதுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டச் சிக்கல்கள் முடியும் வரை வேலையை ஆரம்பிக்க முடியாத நிலைமை ஒன்று உருவாகியுள்ளமையால் அதனை தீர்த்த பின்னர் இந்தக் கைத்தொழிலின் அலுவல்கள் ஆரம்பிப்பதாக குறிப்பிட்ட கைத்தொழிலாளரினால் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. இது நீதிமன்றத்தில் காணப்படும் சிக்கல் ஒன்றாக இருந்தமையால் அதனை தீர்த்துக்கொள்ளும் வரை அமைச்சுக்கு தலையீடு ஒன்று மேற்கொள்ள முடியாது. | சட்டச் சிக்கல்கள் ஏற்படாத கைத்தொழில்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாது காணப்பட்டது. இவ்வாறு பாரிய காணி ஒன்று ஆக்கபூர்வமான உற்பத்தி அலுவல்களுக்கு வழங்கப்படாமையால் பாரிய எண்ணிக்கையான தொழில் வாய்ப்புக்கள் மற்றும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய பாரிய வருமானம் ஒன்றையும் இழந்துள்ளது. | | |
| (ஆ) | மினுவாங்கொடை கைத்தொழில் பேட்டையில் 29 பர்சஸ்களை கொண்ட காணித் துண்டொன்று பொது வசதிகள் மற்றும் நிருவாக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், நிருவாக கட்டிடம் நிர்மாணிப்பதற்கு அல்லது வேறு ஏதும் தொழில் முயற்சிகளுக்கு பகிர்ந்து வழங்குவதற்கோ இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் காணிப் பகுதி கைத்தொழில் பேட்டையில் பொது வசதிகள் மற்றும் நிர்வாக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்துடன் எதிர் காலத்தில் அது தொடர்பாக பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்தரக்கூடிய கருமங்களுக்காக காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரும்பு மற்றும் மரத்திலான வீட்டு மற்றும் அலுவலக தளபாடங்கள் உற்பத்தி செய்வதற்காக மஹர கைத்தொழில் பேட்டையில் 49.5 பர்சஸ்களைக் கொண்ட 06 ஆம் இலக்க காணித் துண்டு 2007 ஜனவரி 19 திகதி தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் படி செயற்திட்ட அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு நேரொப்ப தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும், 100 ஊழியர்களுக்கு பதிலாக மூன்று பேர் மாத்திரம் தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்ததெனவும், போதியளவு உற்பத்தி ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை எனவும், மஹர பிரதேச செயலகத்தின் 2021 திசெம்பர் 27 திகதிய ம/இ/2/5-4 பிரதேச செயலாளரின் கடிதத்தின் படி 2007 ஆண்டு முதல் இந்த நிறுவனம் குத்தகை செலுத்துவதை புறக்கணித்திருந்தது என கண்டறியப்பட்டது. | இந்த நிறுவனம் உற்பத்தி அலுவல்களை உரிய முறையில் மேற்கொள்ளாமை தொடர்பாக அடிக்கடி மெடல்வுட் நிறுவனத்திடம் விடயம் தொடர்பாக விசாரணை செய்திருந்திருந்ததுடன், இது தொடர்பாக பிராந்திய கைத்தொழில் சேவைக் குழுவிற்கும் அழைத்து விசாரிக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்திற்கு குத்தகை செலுத்துவதற்காக ஒரு வருட சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்ததென காணி ஆணையாளர் திணைக்களத்தினால் அறியக்கூடியதாக இருந்தது. அதன்படி, காணி ஆணையாளரின் மற்றும் மஹர பிரதேச செயலாளரின் அறிவுரை கிடைக்கும் வரை தீர்மானம் ஒன்று எடுப்பதை பிற்போடுவது என குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | பயன்தரக்கூடிய கருமங்களுக்காக காணிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அமப/16/1424/723/039 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ரோபோ தொழில்நுட்பத்திற்கான விஷேடத்துவ நிலைய செயற்திட்டம் (CERA) ஆரம்பிப்பதற்கு தேவையான இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கட்டிடம் ஒன்றினை நவீனமயப்படுத்துவதற்காக சுமார் ரூபா 120 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக சேர்க்கப்பட்டிருந்த நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 செப்தம்பர் முதல் 2018 ஒக்தோபர் வரையான காலப் பகுதிக்காக மாதந்தம் ரூபா 725,000 தொகை வீதம் சம்பளம் மற்றும் படி என கூட்டுத்தொகை ரூபா 11 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், கம்பனி ஒன்றாக பதிவு செய்து தேவையான பதவியணியினரை ஆட்சேர்த்தல் மற்றும் செயற்திட்டத்தின் அலுவல்களை ஆரம்பித்தல் மேற்கொண்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்தின் தோல்வியின் காரணமாக கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த இந்த செயற்திட்டம் 2018 திசெம்பர் 28 திகதிய 2013/14 இலக்கம் கொண்ட வர்த்தமானியின் மூலம் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், மீண்டும் 2020 ஆகஸ்ட் முதல் கைத்தொழில் அமைச்சின் கீழ் சாட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர் இந்த செயற்திட்டம் 2007 இன் 07 இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக நிறுவுவதற்கும், கைத்தொழில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பரிந்துரை மீது தலைவர் ஒருவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமனம் செய்வதற்கும் 2020 திசெம்பர் 01 திகதிய அமப/20/1725/320/025 | அமைச்சுக்கள் அடிக்கடி மாற்றப்படல் மற்றும் காணப்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக இந்த செயற்திட்டம் செயற்படுத்துதல் மந்த நிலையில் காணப்பட்டது. எவ்வாறாயினும், இந்தச் செயற்திட்டம் இலங்கை கைத்தொழில் சபையின் கீழ் செயற்படுத்துவதற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | செலவிடப்பட்ட தொகை வீணாகுவதற்கு இடமளிக்காது செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொண்ட அமைச்சரவை தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்னைய கைத்தொழில் அமைச்சரின் அங்கீகாரம் இன்றி திறைசேரி செயலாளரினால் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நியமனம் செய்ததன் காரணமாக இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2017 ஆண்டு முதல் 2022 ஏப்ரல் இறுதி வரை அதாவது 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் புதிய தரை மாடிக் கட்டிடத்தில் இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாமலும், சில பண்டங்களில் துருப்பிடித்தும் காணப்பட்டது. இலங்கையின் கைத்தொழில்களுக்கு தைரியம் வழங்கல், அவற்றை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்திக்கு உதவுதல் ஆகிய குறிக்கோள்களுடன் இந்த ரோபோ தொழில்நுட்பத்திற்கான விஷேடத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததெனவும் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |

## 4 **மனிதவள முகாமைத்துவம்**

### 4.1 **பதவியணி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் அங்கிகரிக்கப்பட்ட பதவியணி 391 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணி 314 ஆகும். அதன்படி, 78 வெற்றிடங்கள் மற்றும் ஒரு பதவியின் மிகையும் அவதானிக்கப்பட்டது. அதாவது சிரேஷ்ட, மூன்றாம் தர, இரண்டாம் | வெற்றிடங்களை நிரப்பும் படி அறிவித்த போதிலும் இதுவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. | அத்தியவசியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தர மற்றும ஆரம்ப தரங்களில் முறையே 15, 02, 46 மற்றும் 15 ஆக வெற்றிடங்கள் காணப்பட்டன. | | |
| (ஆ) | அமைச்சர் அலுவலகத்தின் மூலம் செயற்படுத்தப்படும் நாட்டுக்கு மறுமலர்ச்சி கைத்தொழிலுக்கு வாழ்வு செயற்திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 06 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அமைச்சரின் பதவியணியினர் இருக்கும் போது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்களை இந்த செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தி 2021 செப்தம்பர் முதல் திசெம்பர் வரை அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படியாக ரூபா 1,101,244 தொகை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தகவல்கள் ஏதும் அமைச்சில் காணப்படவில்லை. | பதவியணியினர் சேர்க்கப்பட்ட குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |